**திரைப்படக் கலைஞர்களுக்கும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைபொறுப்பு - 2017**

---

திரைப்படக் கலைஞர்களுக்கும் திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைபொறுப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1986 இன் 03 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைபொறுப்புச் சட்டத்தின் 11 (4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப்பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைபொறுப்பின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2013 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தவேண்டிய வரிகளாக ரூ.72,696 தொகை மீளாய்வாண்டு இறுதிவரையிலும் கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

#### 2.2.2 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நம்பிக்கைபொறுப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி ஓய்வூதியம்பெறும் 15 கலைஞர்களுக்கு 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரையில் ஒருவருக்கு மாதாந்தம் ரூ.2000 வீதம் மொத்தமாக ரூ.1,440,000 செலுத்தப்பட்டிருந்தது. குறித்த கொடுப்பனவு பொருட்டு கலைஞர்களை தெரிவுசெய்த விதம் பற்றிய விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நம்பிக்கைபொறுப்பாளர் சட்டத்தின் 6(2)(1)(உ) பிரிவின் பிரகாரம் நம்பிக்கைபொறுப்பாளர் சபையின் தற்றுணிபு பெறப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியளவில் ரூ.12,287,172 முதலீடு செய்யப்பட்டிருந்தது. அத்துடன், பல வருடங்களாக நம்பிக்கைபொறுப்பாளர் சபையொன்று இருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி, கூட்டுத்தாபன நம்பிக்கைபொறுப்பின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் விளைவு ரூ.117,072 மிகையாக இருந்தவுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் குறைவு ரூ.21,221 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூ.138,293 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த

ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் முதலீட்டு வருமானம் ரூ.126,463 ஆல் அதிகரித்திருந்தமை மேற்படி நிதிசார் விளைவுகளின் வளர்ச்சிக்கு பிரதான காரணமாக விளங்கியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

### 4.1 செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்

-------------------------------------------------

1986 இன் 03 ஆம் இலக்க திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான சட்டத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம், நம்பிக்கைபொறுப்பாளர் சபையொன்று இல்லாத காரணத்தினால் நம்பிக்கைபொறுப்பின் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இரந்தது.

(அ) பயனாளிகள் பொருட்டு சேமிப்பு நிதியங்களை உருவாக்குதல், சிக்கன சங்கங்களை உருவாக்குதல், கடன் வழங்குதல், வீட்டு வசதிகளை வழங்குதல் போன்ற குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளுதல்.

(ஆ) காத்திருக்கும் ஆவணத்திலுள்ள 102 கலைஞர்கள் பொருட்டு நலன்கள் வழங்கும் வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

(இ) ஓய்வூதிய நலன்பெறும் கலைஞர் அல்லது தொழில்நுட்பவியலாளர் ஒருவர் மரணமடைந்தால் அதற்குப் பதிலாக காத்திருக்கும் ஆவணத்திலிருந்து தகுதியுள்ள ஓய்வூபெற்றவர் ஒருவரை தெரிவுசெய்தல் இற்றைப்படுத்தி மேற்கொள்ளுதல்.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் அங்கத்தவரொருவர் உயிருடன் இருக்கிறாரா என்பதுபற்றி உரியவாறு உறுதிப்படுத்திக்கொள்ளும் முறையியலை கடைப்பிடிக்காமல் ஓய்வூதியக் கொடுப்பனவு மாதாந்தம் வங்கியிலிடப்பட்டிருந்தது.

(ஆ) வங்கியிலிடப்படாமல் பணத்தை பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியம் பெறுபவரொருவர் ரூ.36,000 ஆன 18 மாதங்கள் ஓய்வூதியத்தை பெறுவதற்காக வரவில்லை என்பதுடன் இயைபான பணம் உரித்து கோரப்படாத ஓய்வூதிய ஏற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. எனினும், ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளப்படாமைக்கான காரணங்களை கண்டறிந்து அதுதொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சட்டத்தின் 6(2)(அ) உபபிரிவின்படி, பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி நிதியங்களை திரட்டிக் கொள்வதற்கு வசதிகள் இருந்தும் அத்தகைய எவ்வித நிகழ்ச்சித்திட்டமோ அல்லது செயற்பாடோ மேம்பாட்டு ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

திரைப்படக் கலைஞர்களுக்கும் தொழில்நுட்பவியலாளர்களுக்குமான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைபொறுப்பு தொடர்பான நிதி ஒழுங்குவிதி 133(1)(அ) பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நம்பிக்கைபொறுப்பின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) ஓய்வூதியம் செலுத்துதல் | ஓய்வூதியம் பெறுபவர்கள் உயிர்வாழ்கிறார்கள் என்பதனை அறிந்துகொள்வதற்கான உள்ளகக் கட்டுப்பாடொன்று இல்லாமை மற்றும் காத்திருக்கும் ஆவணத்தை இற்றைப்படுத்தாமை. |
| (ஆ) நிதியத்தை அதிகரித்துக் கொள்ளுதல் | நலன்களை வழங்குவதற்கு போதுமானவாறு நிதியத்தை அதிகரித்துக் கொள்ளாமை. |